கடவுள் துணை.

கலா தரங்கிணி.

புத்தகம் க.] கஅஅளஙு ஜனவரிமீ [சஞ்சிகை கஉ.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

ஆனந்த மயமாகி யருவாகி யகிலமா யான்றபொற் சோதி யாகித்
தானந்த மில்லாத் தனிப்பெருந் தகவொடவ தாரம் பயின்ற தாகி
ஈனந் தவிர்த்தெம்மை யாள்வானெ ரருளினு லெளியவர்ச் சையுமாகியுள்
வானந் தழைத்தோங்க வொளிருமொரு பொருவிலா வத்துவை வணங்கல்
[செய்வாம்.

விரதாதிகள்.

சர்வாலயதீபதரிசன வரலாறு.

ஸ்ரீகைலாசத்தில் பரமசிவன் பார்வதீசமேதராய் வீற்றிருக்கும்போது ஒருநாள் அங்கேற்றியிருந்த நெய்த்தீபங்களில் ஒன்று ஒளிமழுங்குந் தருணத்தில் ஓரெலி அபுத்திபூர்வகமாய் அதைத் தன்முகத்தால் தூண்டிப் பிரகாசிக்கச்செய்தது. அதைநோக்கிக் கைலாசபதி திருவுளத்திற் கிருபைகூர்ந்து அவ்வெலிக்குத்தானவசரீரமும் தண்டச்செல்வமுங் கொடுத்து பூமியில்பிறக்கும்படிகடாக்ஷித்தருளினுர். அவ்வெலியானது அக்கைலாசபதியினுடைய கடாக்ஷத்தினுலே மஹாபலிசக்கிரவர்த்தியாய்ப்பிறந்து சகல ஐசுவரியத்தையும் அநுபவித்திருக்குங் காலத்தில் ஒருநாள் சிவதரிசனத்துக்குப் போகவெத்தனித்துத் தன் இராஜசின்னமுதலிய சகல ஆடம்பரத்துடன் சிவாலயத்துட்பிரவேசித்து பிரதக்ஷிணம் வருகையில் அவ்விடத்திலேற்றியிருந்த தீபநெய்யில் ஓர்துளி யிச்சக்கிரவர்த்தியின் தேகத்திற்சொட்டியது; உடனே சக்கரவர்த்தி தேகமுழுமையும் வ்ரணம் (புண்) கண்டுவெகுகாலம் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒருநாள் பரமேசுவரர் கிருபைகூர்ந்து சக்கிரவர்த்தியே நீ மிகவும் அகங்காரியாகையால் இஃதுண்டாயிற்று; நீ இன்றுமுதல் உத்தேசித்து நெய்முதலிய பொருள்களால் ஆலயங்கட்குத் தீபமேற்றுவையேயானுல் உனக்கு இந்த வ்ரணந்தீர்ந்து சாயுச்சியபதம் கிடைக்குமென்று அசரீரியாகத் திருவுளம்பற்றியதைக்கேள்வியுற்ற சக்கிரவர்த்தியானவர் ஆனந்

தமடைந்து அந்தக்கட்டளையின்படியே அன்றுமுதல் சிவாலயங்களிலு மற்ற இருள்சூழ்ந்த ஆரணியங்களிலும் தீபமேற்றிக்கொண்டு வருங்காலத்தில் ஒரு நாள் ஸ்ரீகைலாசபதியான சிவபெருமானானவர் திருவுளமிரங்கிக் கார்த்திகை மாசம் பூர்வபக்ஷம் கார்த்திகை நக்ஷத்திரத்தில் தேஜோமயமாயெழுந்தருளி அச்சக்கிரவர்த்திக்குச் சாயுச்சிய பதமளித்தருளினார். அக்காலத்தில் சிவதரிசனத்துக்கு வந்திருந்த தேவர்களெல்லாம் அச்சோதியைக்கண்டு பயந்து துதிசெய்து சுவாமியினுடைய உக்கிர உஷ்ணந்தணியும்பொருட்டுப் பொரியவல் நிவேதனம் பண்ணினார்கள். இவ்வாறு கைலாயப்பதி மாபலிசக்கிரவர்த்திக்குச் சோதிசொரூபமாகத் தரிசனங்கொடுத்த காரணமாகச் சிவாலயங்கள் தோறும் கார்த்திகைமாசம் பூர்வபக்ஷம் கார்த்திகைநக்ஷத்திரத்தில் தீபம்வைக்கவும் சுட்கப்பனை (சொக்கப்பானை) கட்டவுமாயிற்று. இதற்கு ஆகமவிதியென்னெனில், கார்த்திகைநக்ஷத்திரத்திற்கு முன்னாளாகிய பரணிநக்ஷத்திரத்தின் சாயங்காலம் அதிவாசதீபத்தில் அக்கினிகாரிய முதலானவைகளின் மூலமாக மகாலிங்கமூர்த்தியை ஆவாகனம்பண்ணி அந்தத்தீபத்தைச் சுவாமி சன்னிதியிற் றானே பூஜித்துவைக்கவேண்டும்; அதற்குமேல் தென்னை பனை கமுகு வாழை மூங்கில் என்னும் இந்தமரங்களில் ஓர்விதமரத்தை ஆலயத்திற்கும் இந்திரதிக்குக்கும் மத்தியஸ்த்தானமாகிய பிரமஸ்த்தானத்தில் நாட்டவேண்டும்; இந்தமரத்துக்குத் தீபதண்டமென்று பெயராம், இந்தத்தீபதண்டம் கர்ப்பகிருகத்து விமானம் எவ்வளவு உயரமோ அவ்வளவு உயரமாவது அந்தவிமானக்கழுத்தினளவாவது இருக்கவேண்டும்; இவ்வித தீபதண்டத்துடன் உலர்ந்த ஓலையாவது சருகாவது விமானம்போல் கட்டவேண்டும். மேற்சொன்ன பரணிநக்ஷத்திரத்துக்கு மறுநாளாகிய கார்த்திகை நக்ஷத்திரத்தில் பஞ்சமூர்த்தசமேதமாய் சோமாஸ்கந்த மூர்த்தியை உற்சவாலங்காரத்துடன் எழுந்தருளப்பண்ணி மேற்படி தீபம் சுவாமிக்குமுன்னே வரும்படியாகக் கொண்டுவந்து தீபதண்டத்தை ஸம்ஸ்காரப்படுத்திக்கொண்டு அத்தீபத்தை அந்ததண்டத்தின் மேல்வைத்துச் சருகுகளைக்கொளுத்திவிட்டு அச்சருகுகள் எரிந்தபின்பு மேற்படி தண்டத்தைச் சேதித்து விடவேண்டும். அந்தச்சோதியைச் சிவமாகப் பாவனைசெய்து தரிசிப்பவர்களுக் கிம்மையிற் செல்வமும் மறுமையில் மோக்ஷமுமுண்டு. மலையைச் சேர்ந்ததலங்களில் நக்ஷத்திரம் பிரதானமாகவும், சமுத்திரஞ் சேர்ந்த தலங்களில் பௌர்ணமி பிரதானமாகவும், தீபம் வைக்கவேண்டியது; இவை ஆகம முறைமை.

இனி, திருவண்ணாமலைத் தீபதரிசனவிவரம்.—

முன்னொருகாலத்தில் மகாவிஷ்ணுவுக்கும் பிரமதேவனுக்கும் பிரமவாதம் நேரிட்டதால் அதைத்தீர்க்கும்பொருட்டாகச் சிவபெருமான் அக்கினிமலைவடிவாய் அவர்கள் மத்தியில்நின்று அக்கலகத்தைத்தீர்த்தருளினார். பின்பு அவர்கள் வேண்டுதலினாலே அவரொரு சிறியமலையுருக்கொள்ள அதைக்கண்டபிரமதேவனும் மகாவிஷ்ணுவும் மகிழ்ச்சியோடவரைநோக்கிச் சுவாமி இம்மலையினுச்சியில் ஒருசோதியெந்நாளுந் தெரியும்படிக்குக் கிருபைசெய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சிவபெருமானானவர்,—

"கார்த்திகைக்குக்கார்த்திகைநாளொருசோதி
மலைநுனியிற்காட்டாநிற்போம்
வாய்த்தவந்தச்சுடர்காணிற்பசிபிணியில்
லாதுலகின்மன்னிவாழ்வார்
பார்த்திவர்க்குமருந்தவர்க்குமிடையூறு
தவறுமிதுபணிந்தோர்கண்டோர்
கோத்திரத்திலிருபத்தோர்தலைமுறைக்கு
முத்திவரங்கொடுப்போமென்றார்."

அப்படி அருணாசலபதி திருவாய்மலர்ந்தருளிய பிரகாரம் அம்மலையின் மேல்தீபதரிசனமாகிக்கொண்டுவந்த பாவனையாக இப்போதும் தீபதரிசன மாகின்றபடியால் அத்தினத்தில் இந்திரதீர்த்த முதலிய தீர்த்தமாடி கிரிவலம் வந்து தீபதரிசனஞ்செய்து துதிப்பவர் அளவிலாச்சம்பத்தையுமோக்ஷத்தையு மடைவர் என்பதாம்.

நீதிபோதம்.

ஒருவன் இம்மையில் அடையவேண்டிய அறம்பொருளின்பங்களுள், அறமே எனைப்பொருளின்பங்கள் பெறுகுவதற்குக் காரணமாதலால் அதனை யியற்றுமாறு ஒருவாறு சுருக்கமாகக் கூறப்படுகின்றது.

விருப்பும் வெறுப்புமிலனாகித் தன்வயத்தனாதல் முதலிய எண்குணங்களு முளனாகித் தர்மஸ்வரூபியாயிருக்கின்ற முதற்கடவுளைத் தொழுது வழிபட்டு,

"கல்லாதானூருங்கலிமாப்பரிப்பின்றா
வல்லாதான்சொல்லுமுரையின்பயனின்றா
வில்லாதானல்லவிழைவின்றாவின்றா
கல்லாதான்கோட்டிகொளல்"

என்கிறபடியே கல்லாமையால் நேருமிழிவையறிந்து,

"உற்றுழியுதவியுமுறுபொருள்கொடுத்தும்
பிற்றைநிலைமுனியாதுகற்றனன்றே
பிறப்போரன்னவுடன்வயிற்றுள்ளுஞ்
சிறப்பின்பாலாற்றாயுமனந்திரியு
மொருகுடிப்பிறந்தபல்லோருள்ளு
மூத்தோன்வருகவென்னாதவரு
ளறிவுடையோனாறரசுஞ்செல்லும்
வேற்றுமைதிரிந்தநாற்பாலுள்ளுங்
கீழ்ப்பாலொருவன்கற்பின்
மேற்பாலொருவனுமவன்கட்படுமே"

எனக்கூறுமாற்றால் கல்வியின் பெருமையை ஓர்ந்து அதனை விரும்பிக்கற்று,

"மறவுரையுங்காமத்துரையுமயங்கப்
பிறவுரையுமல்கியஞாலத்—தறவுரை

கேட்குந்திருவுடையாரேபிறவியை
மீட்குந்திருவுடையார்"

என்கையாலே கற்றறிந்தொழுக்கந்தவருதார்மாட்டுப் பலபொருளையும் பரக் கக்கேட்டு,

"அறிவினன்மாட்சியொன்றில்லாவொருவன்
பிறிதினன்மாண்டதெவனும்—பொறியின்
மணிபொன்னுஞ்சாந்தமுமாலையுமற்றின்ன
வணியெல்லாமாடையிற்பின்"

என்பவாகலின் அறிவுடையனாகி,

"தன்னைவியந்துதருக்கலுந்தாழ்வின்றிக்
கொன்னேவெகுளிபெருக்கலு—முன்னிய
பல்பொருள்வெஃகுஞ்சிறுமையுமிம்மூன்றுஞ்
செல்வமுடைக்கும்படை"

என்பதனால் தன்னிடத்துள்ள குற்றங்கடிந்து,

"மொய்சிதைக்குமொற்றுமையின்மையொருவனைப்
பொய்சிதைக்கும்பொன்போலுமேனியைப்—பெய்த
கலஞ்சிதைக்கும்பாலின்சுவையைக்குலஞ்சிதைக்குங்
கூடார்கட்கூடிவிடின்"

என்று முன்னோர்கூறியதனால் சிற்றினஞ்சேராதிருந்து, பெரியாரைத்துணைக் கொண்டு,

"மழையின்றிமாநிலத்தாரில்லைமழையும்
தவமிலாரில்வழியில்லைதவமும்
அரசனுவில்வழியில்லையரசனும்
இல்வாழ்வானில்வழியில்"

என்றதனால் உலகமும், அதனிடத்துக்கோலுங்குடியும், அறம்பொருளின் பங் களும் நிலைபெறுதற்பொருட்டு முதற்கடவுளினருளினால் நிகழ்கின்ற மழையின் வளங்குன்றாவண்ணம் ஸத்கர்மங்களையியற்றி, நாற்பொருட்பயனுணர்ந்து, பஞ்சேந்திரிய நிக்கிரகம்பண்ணின சாதுக்கள் சங்கத்தில் பயபத்தியும், நெறித வருத அந்தணர்குழாத்தில் பணிவும், வித்துவான்கள்சபையில் விசுவாசமும் வைத்து, முற்றத்துறந்த முனிவர்களைவந்தித்து, தந்தைதாயர் ஆசாரியர் முத லிய பெரியோர்களையும் வேதாகமங்களையும் கௌரவப்படுத்திவரல்வேண்டும்.

"எளிதெனவிகழா தரிதெனவயாது
நுமக்குநீர்நல்குதி ராயின்மனத்திடை
நினைப்பினும்பிறக்கு மொழியினும்வளருந்
தொழிற்படிற்சினைவிடேஉப் பயக்குமுணர்த்தின்
இவணுமும்பருந் துணையேயதனற்
றுறைதொறுந்துறைதொறுநோக்கி
அறமேநிறுத்துமி னறிந்திசினோரே"

என்பவாகலின், இம்மை மறுமைகட்குப் பொருளையும் போகத்தையும் அதன்

பின் முத்தியையும் தருதலால் அறத்தையென்றும் திரிகரணங்களாலுந் திருந்தச்செய்யல்வேண்டும். செய்யப்படக்கூடியதருமத்தைக் கடுஞ்சொல் பொறுமை ஆசைகோபங்கள் கலவாமலிருக்கும்படி, "மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்" என்பவாகலின், பின்னுவதென்று பிடித்திராதே விரைந்து செய்யல்வேண்டும். இன்பநுகர்தலும் தன்மனைவிமாட்டுச் சேர்தலாகிய அறத்தோடு பொருந்துமாயின் இன்பத்தையும் புகழையும் தரவல்லதாம்; பிறர்மனைநயத்தன்முதலாகிய பாவத்தோடு பொருந்துமாயின் துன்பத்தையும் பழியையும் தரவல்லதாம்; ஆதலால், பழிபாவங்கட்கு அஞ்சி புகழ்புண்ணியங்களை நாடிச் செய்யற்பாலதாகிய அறமாவது,

"மருவியகற்பின்மனையாளுந்தானும்
இருவராய்க்கொண்டெய்ப்பினல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கையென்னு மியல்புடையபொற்சகடஞ்
செல்லாதுதெற்றித்துநின்று"

என்றதனால் தர்மபத்தினியோடுகூடிச்செய்யினல்லது சிறக்காமையின், வரவுக்குத்தக்க செலவுசெய்பவளாய்த் தன்கணவனைப் பகைவர்முன் வெள்காது நடக்கச்செய்யுங் கற்புடையளாய்ப் புகழும்பயனும் விளைவிக்கு மனைவியுடன் கூடி,

"கற்றவர்கடவுட்டானஞ்சேர்ந்தவர்களைகணில்லார்
அற்றவரந்தணாளரன்றியுமவர்கள்போல்வார்க்
குற்றதோரிடுக்கண்வந்தாலுதவுதற்குரித்தன்றாயிற்
பெற்றவிவ்வுடம்புதன்னாற்பெறும்பயனில்லைமன்னே"

என்று முன்னோர்கூறியதன்பொருளை நன்குணர்ந்து, பிரமசாரியர் வானப்பிரத்தர் சன்னியாசியர் பிதுர்தேவர் ஆசாரியர் கடவுள் விருந்தினர் சுற்றத்தார் பசுக்கள் பார்ப்பார் வறியவர் அங்கவீனர் நோயர் விருத்தர் பாலர்முதலியோர்களை உண்டி உடை உறையுள் மருந்து முதலியகொடுத்துக்காத்து,

"அல்லலொருவற்கடைந்தக்கான்மற்றவற்கு
நல்லகிளைகளெனப்படுவ—நல்ல
வினைமரபின்மற்றதனைநீக்குமதுவே
மனைமரமாயமருந்து"

என்றதனால் சுற்றத்தாரை இன்சொல்லாலும் நன்பொருளாலும் நயப்பித்து

"உயர்குடிநனியிற்றோன்றலூனமிலியாக்கையாதன்
மயர்வறுகழிந்தகேள்வித்தன்மையால்வல்லராதல்
பெரிதுணர்வறிவேயாதல்பேறறங்கோடலென்றாங்
கரிதிவைபெறுதல்கூடாபெற்றவர்மக்களென்ப"

என்றதற்கேற்ப, ஈன்றோர்க்கெழுபிறப்பிலு நன்மையடைவித்தலும், ஐம்பெருவேள்வியாற்றலும் வல்லுநராக மைந்தரை ஐயந்திரிபறவோதியுணர்ந்த அறிவுடையோரவையில் முந்தியிருக்கத் தக்கவராகச் செய்து,

"முன்பிற்சிறந்தாரிடையுள்ளவர்காதன்முற்றப்
பின்பிற்சிறந்தார்குணநன்றிதுபெற்றயாக்கைக்

கென்பிற்சிறந்தாயதோரூற்றமுண்டென்னலாமே
அன்பிற்சிறந்தாயதோர்பூசனையார்களுண்டே"

என்பதனால் யார்மாட்டும் அன்புடையனாய்,

"இன்சொன்மலர்ச்சியிடமினிதுண்யார்யார்க்கும்
வன்சொற்களைந்துவகுப்பானேல்—மென்சொல்
முருந்தேய்க்குமுட்போலெயிற்றினாய்நாளும்
விருந்தேற்பர்விண்ணோர்விரைந்து"

என்றதனால் உள்ளானநேசத்தை நகைமுகத்தாற்காட்டி விருந்தினரை யுபசரித்து,

"எந்நன்றிகொன்றார்க்குமுய்வுண்டாமுய்வில்லை
செய்ந்நன்றிகொன்றமகற்கு"

என்றும்,

"ஆன்முலையறுத்தவறனில்லோர்க்கு
மாணிழைமகளிர்கருவுசிதைத்தோர்க்கும்
பார்ப்பார்த்தப்பியகொடுமையோர்க்கும்
வழுவாய்மருங்கிற்கழுவாயுமுளவே
நிலம்புடைபெயர்வதாயினுமொருவன்
செய்திகொன்றோர்க்குய்தியில்"

என்றும் சொல்லுகிறபடியே செய்ந்நன்றிமறத்தல் பெரும்பாவமாகையால் பிறர்செய்தநன்றியை மறவாதிருந்து,

"ஒன்றுநரம்பென்கோவொன்றாதவென்பென்கோ
வின்றசைதானென்கோயாதென்கோ—மென்றொடையாழ்ப்
பண்ணோட்டமின்சொற்பணைத்தோளாய்சேர்ந்தவர்பாற்
கண்ணோட்டமில்லாதகண்"

என்பதனால் உறவினர் நண்பர்முதலியோரிடத்துக் கண்ணோட்டமுடையனாகி, விஷயபோகங்களை நுகர்ந்திடினும்,

"இந்திரியக்குஞ்சரத்தைஞானவிருங்கயிற்றாற்
சிந்தனைத்தூண்பூட்டித்திதிபெறப்—பந்திப்பார்
இம்மைப்பயனுமினிச்செல்கதிப்பயனுந்
தம்மைத்தலைப்படுப்பார்"

என்பதற்கேற்ப மனோவாக்காயங்களைத்தத்தம் போக்கில்விடாதடக்கி,

"பிறப்புநெடுவாழ்க்கைசெல்வம்வனப்பு
நிலக்கிழமைமீக்கூற்றங்கல்விநோயின்மை
இலக்கணத்தாலிவ்வெட்டுமெய்துபவென்றும்
ஒழுக்கம்பிழையாதவர்"

என்கையாலே ஒழுக்கத்தைச் சிறிதுங் கைவிடாது,

"புக்கவிடத்தச்சம்போதரும்போதச்சம்
துய்க்குமிடத்தச்சந்தோன்றாமற்காப்பச்சம்

எக்காலுமச்சந்தருமாலெவன்கொலோ
உட்கான்பிறனில்புகல்"

என்கிறபடியே பலபடியாலும் பழிபாவங்கட் கிடமாகிய பரதாரபோகத்தைப்பரித்தியஜித்து,

"எள்ளிப்பிறருணாக்குமின்னுச்சொற்றன்னெஞ்சில்
கொள்ளிவைத்தாற்போற்கொடிதெனினு—முள்ளி
அறிவென்னுநீராலவித்தடக்கலாற்றிற்
பிறிதொன்றும்வேண்டாதவம்"

என்கையாலே அகுயைமுதலியகாரணத்தாலாயினும், அறிவீனத்தாலாயினும் ஒருவன்பிழைசெய்தாலும் அவனையொறுத்துத்தண்டியாதே பொறுத்துச்சாந்தனுகவிருந்து,

"தானத்திற்குரித்துமன்றுதானிவனைந்தீயிற்சால
வீனத்திலுய்க்கிற்குமெச்சத்தையிழக்கப்பண்ணும்
மானத்தையழிக்குந்துய்க்கின்மாற்றலர்க்கடிமையாக்கும்
ஊனத்தீநரகத்துய்க்கும்பிறர்பொருளுவக்கின்வேந்தே"

என்கிறபடியே, தீவழியிற் சம்பாதித்தபொருள் வந்தவெள்ளம் நின்றநீரையுங் கொண்டுபோவதுபோல் முன்னைப்பொருளையுந் தொலைத்து வம்சத்தையுங் கெடுத்துக் கடுந்துயரையும் மறுமைப்பயனையழிக்கும் பாவத்தையுங் கொடுத்துப் பரிபவப்படுத்துமாகலின், பிறர்பொருளை வெஃகுதன்முதலியசெய்யாது,

"மையேய்தடங்கண்மயிலன்னசாயலாய்
மெய்யேயுணர்ந்தவர்தாமுரைப்பர்—பொய்யே
குறளைகடுஞ்சொற்பயனில்சொன்னான்கும்
மறவியின்வாயினவாமற்று"

என்பவாகலின் பொய் குறளை கடுஞ்சொல் பயனில்சொல் முதலியவற்றைப் பாராட்டாதிருந்து,

"வாயுவினைநோக்கியுளமாண்டவயநாவாய்
ஆயுவினைநோக்கியுளவாக்கையதுவேபோல்
தீயவினைநோக்குமியல்சிந்தனையுமில்லாத்
தூயவனைநோக்கியுளதுப்புரவுமெல்லாம்"

என்பதனால், எப்பிறப்படைந்து எங்குற்றாலும் அங்குச்சென்று நற்செய்கைமுற்றுமழித்துக் கொடியதுன்பங்களை விளைக்கவல்லதாகிய தீவினைக்கஞ்சி, பரோபகார சிந்தையும் ஈகையும் உடையனுகி,

"ஒருவனதிரண்டியாக்கையூன்பெய்துநரம்புபோர்த்த
உருவமும்புகழுமென்றாங்கவற்றினுளூழின்வந்து
மருவியயாக்கையிங்கேமாய்ந்திறுமற்றயாக்கை
திருவமர்ந்துலகமேத்தச்சிறந்துபின்னிற்குமன்றே"

என்றுகூறியபடியே பூதவுடம்பழியினும் தானழியாமல்நின்று மண்ணேரானேயன்றி விண்ணேரானுங் கொண்டாடப்படத்தக்க புகழைச் சம்பாதித்தல் ஆகும்.

பொருளிலக்கணவிஷயம்.

[௨௭௯ - வது பக்கத்தின் தொடர்ச்சி.]

5.—உட்கோள் [குறிப்பறிதல்.]

1. அணியுமமிழ்துமென்னாவியுமாயவன்றில்லைச்சிந்தா
மணியும்பராரறியாமறையோனடிவாழ்த்தலரிற்
பிணியுமதற்குமருந்தும்பிறழப்பிறழமின்னும்
பணியும்புரைமருங்குற்பெருந்தோளிபடைக்கண்களே.

2. இருநோக்கிவளுண்கணுள்ளதொருநோக்கு
நோய்நோக்கொன்றந்நோய்மருந்து.

---

1. மின்னினையும் பாம்பையுமொக்கும். இடையினையும் பெருந்தோளினையுமுடையாளது படைபோலுங்கண்கள் பிறழுந்தோறும் பிறழுந்தோறும் பொதுநோக்கத்தாற் பிணியும், உள்ளக்கருத்து வெளிப்படுக்கு நாணோடு கூடிய நோக்கத்தால் அதற்கு மருந்தும் ஆகாநின்றன, எ - று.—எனக்காபரணமும் அமிழ்தும் என்னுயிருமாயவன், தில்லைக்கட் சிந்தாமணிபோல் அன்பர்க்கு நினைத்தவைகொடுப்போன், அன்பரல்லாத தேவர்களறியாத வந்தணன், அவனுடைய திருவடிகளை வழுத்தாதவரைப்போல உறும்பிணியுமெனக் கூட்டுக.—[அணியென்றார் அழகுசெய்தலான்; அமிழ்தென்றார் கழிபெருஞ் சுவையோடு உறுதிபயத்தலுடைமையான்; ஆவியென்றார் காதலிக்கப்படும் பொருளெல்லாவற்றினுஞ் சிறந்தமையான்;—ஈறிலின்பம்பயக்கு மிறைவனோடுசார்த்த அணியும் அமிழ்தும் ஆவியும் இறப்பவிழிந்தனவேயாயினும், சொல்லுவானது கருத்துவகையானும், உலகத்துப்பொருள்களுள் அவற்றினுங்குமிக்கன வின்மையானும், உயர்ந்தனவாய் உவமையாயின. உம்பரால் என்பதுபாடமாயின், உம்பரானறியப்படாத எனவுரைக்க. பிறழப்பிறழும் என்பதுபாடமாயின், பிணியுமருந்தும் மாறிமாறிவரப் படைக்கண்கள் பிறழும் எனவுரைக்க. பிணியுமதற்குமருந்துமாம் பெருந்தோளி படைக்கண்கள் என்றமையின், அவளுடம்பாட்டுக்குறிப்பு அவள் நாட்டத்தானறிந்தானென்பது.]

2. தலைமகன் தலைமகளுளப்பாட்டுக்குறிப்பினை அவள்நேக்கினானறிந்தது.—(இ - ள்.) இவளுடைய வுண்கணகத்ததாகிய நோக்கு இதுபொழுது என்மேலிரண்டுநோக்காயிற்று; அவற்றுள் ஒருநோக்கு என்கண் நோய்செய்யு நோக்கு, ஏனையது அந்நோய்க்கு மருந்தாயநோக்கு, எ - று.—[உண்கண் - மையுண்டகண். நோய்செய்யுநோக்கு - அவண்மனத்தினாய காமக்குறிப்பினை வெளிப்படுக்கின்ற நோக்கு. மருந்தாயநோக்கு - தன்கணிகழ்கின்ற அற்புநோக்கு. நோய்செய்யு நோக்கினைப் பொதுநோக்கென்பாருமுளர். அது நோய்செயிற் கைக்கிளையாவதல்லது அகமாகாமையறிக. இவ்வருத்தந் தீரும் வாயிலுமுண்டாயிற்றென்பதாம்.]

3. கண்களவுகொள்ளுஞ்சிறுநோக்கங்காமத்திற்
செம்பாகமன்றுபெரிது.

4. மண்ணிற்சிறந்தபுகழ்த்தஞ்சைவாணன்மலயவெற்பிற்
பெண்ணிற்சிறந்தவிப்பேதைதன்பார்வைபெருவினையே
னெண்ணிற்சிறந்தவிருந்துயர்நோய்தனக்கின்மருந்தாய்க்
கண்ணிற்சிறந்தவுறுப்பில்லையாவதுங்காட்டியதே.

5. பாயுமலர்த்தண்பொழில்சூழும்வெங்கைப்பழைமலைசீ
ராயுமுனிவரர்தாமேமுனிவருளாக்குதல்போ
னோயுமங்நோய்க்குமருந்துந்தராநிற்குநூற்பகவி
றேயுமருங்குற்பெருமுலைமாதர்திருக்கண்களே.

6. பாலார்மொழிபங்கர்கோடீச்சரவெற்பின்பாலுறுநா
மாலாயினுமந்தமால்சோர்ந்துமுன்பின்மகிழ்வுபெற

---

3. இதுவுமது. (இ - ள்.) இவள்கண்கள் யான்காணாமல் என்மேனோக்குகின்ற அருகியநோக்கம் மெய்யுறு புணர்ச்சியின் ஒத்தபாதியளவன்று, அதனினுமிகும், எ - று.—[தானோக்கியவழி நாணியிறைஞ்சியும் நோக்காதவழி உற்றுநோக்கியும் வருதலாற் களவுகொள்ளுமென்றும், அஃதுளதாங்காலஞ்சிறிதாகலிற் சிறுநோக்கமென்றும், அஃது உளப்பாடுளவழி நிகழ்வதாகலின் இனிப்புணர்தல் ஒருதலையென்பான் செம்பாகமன்றுபெரிதென்றுங் கூறினான்.]

4. மண்ணிலே மிகுந்த புகழையுடைய தஞ்சைவாணன் பொதியவெற்பிடத்துப் பெண்மையிற்சிறந்த இப்பேதைதனதுபார்வை பெரியதீவினையேனெண்ணத்தின்மிகுந்த பெரியவேட்கைநோய்தனக்கு வருத்தப்பாடுசெய்யாது இன்பஞ்செய்யுமருந்துமாகி, கண்போற் சிறந்த வுறுப்பில்லையாவதுங் காட்டியது, எ - று.—[துயர் - ஆகுபெயர். வேட்கையை நோயாக்கலால் பார்வையை மருந்தாக வுருவகஞ்செய்யப்பட்டது. அவயவம்பலவற்றினும் பயன்றருவதின்மையாய்க் கண்பயன்றருவதாய்ச் சிறத்தலின் கண்ணிற் சிறந்தவுறுப்பில்லையாவதுங் காட்டியதென்று கூறியது.]

5. நூலிழையின்பாதியைப்போற்றேய்ந்த நுண்ணிடையினையும் பருத்தபயோதரங்களையுமுடைய இம்மாதராளது அழகியகண்கள், தேன்சொரியுமலர்களையுடைய குளிர்ந்த சோலைசூழ்ந்த திருவெங்கைத்தலத்திலிருந்து விருத்தாசலத்தின் மாகாத்மியத்தை (நூல்களால்) ஆராயாநின்ற முனிவர்கள்தாமே சாபாநுக்கிரகங்களைச் செய்யுமாறுபோல, எனக்கு நோயையும் அங்நோய்க்குமருந்தையும் தாமேதராநின்றன, எ - று.

6. பால்போலுமின்சொல்லையுடைய பார்வதீ தேவியைப் பாகத்திலேயுடைய பரமசிவனது கோடீச்சரவெற்பினிடத்துப் பொருந்திய யாம் மாலாயினோம், அந்தமால்நீங்கி முன்போலவே மகிழ்ச்சியையடைய, நூல்போலுமிடையையுடைய இம்மாதினது வேல்போலுங் கண்களிலுண்டாகிய பார்

மேலாழிதன்னுள்விடத்தோடமிர்தம்விளைந்ததொக்கும்
நூலாமிடையினள்வேல்விழித்தோன்றியநோக்கங்களே.

6.—தெய்வத்தைமகிழ்தல்.

1. வளைபயில்கீழ்கடனின்றிடமேல்கடல்வானுகத்தின்
றுளைவழிநேர்கழிகோத்தெனத்தில்லைத்தொல்லோன்கயிலைக்
கிளைவயினீக்கியிக்கெண்டையங்கண்ணியைக்கொண்டுதந்த
விளைவையல்லால்வியவேனயவேன்றெய்வமிக்கனவே.

வைகள் முற்காலத்திற் பாற்கடலில் விடத்தோட்முதமுண்டானதை ஒத்திருக்கின்றன, எ - று.

1. சங்குநெருங்கின கீழ்த்திசைக்கடலிலேநின்று இட, அவ்வொத்தகழி மேற்றிசைக்கடலிலிட்ட பெரியநுகத்தினது துளைக்கட்சென்று கோத்தாற்போல, தில்லையிடத்துப்பழையோனது கயிலைக்கண் ஆயத்தாரிடத்துநின்று நீக்கி இக்கெண்டைபோலுங் கண்ணுடையாளைக் கைக்கொண்டுதந்த நல்வினையின் விளைவாகிய தெய்வத்தையல்லது, மிக்கனவாகிய பிறதெய்வத்தை வியப்பதுஞ்செய்யேன் நயப்பதுஞ்செய்யேன், எ - று.—கைலைக்கட்கொண்டு தந்தவெனவியையும். இவளைத்தந்த தெய்வத்தையல்லது நயவேனென்று அவளது நலத்தைமிகுத்தமையின் இதுவும் நலம்பாராட்டல். பயந்தோர்ப் பழிச்சற்பாற்படுத்தினுமமையும்.

பழமொழிகள்.

46. அயனிட்ட எழுத்தில் அணுவளவுந்தப்பாது.
அயனிட்டகணக்கு ஆருக்குந்தப்பாது.
அன்றெழுதினவன் அழித்தெழுதுவானு?
47. அரையிலேபுண்ணும் அண்டையிலே கடனுமாகாது.
48. அவனருளுற்றால் அனைவருமுற்றார், அவனருளற்றால் அனைவருமற்றார்.
அவனன்றியோ ரணுவுமசையாது.
49. அழுக்கை அழுக்குக்கொல்லும், இழுக்கை இழுக்குக்கொல்லும்.
50. அளக்கிறநாழி அகவிலையறியுமா?
51. அறைகாத்தான் பெண்டிழந்தான்.
52. அறுக்க ஊறும் பூம்பாளை, அணுக ஊறும் சிற்றின்பம்.
53. அற்பசினேகம் பிராணசங்கடம்.
54. அற்பன்பணம்படைத்தால் வைக்கவிடமறியான்.
55. அன்பானசினேகத்தை ஆபத்திலறி.
56. அன்னமயமன்றி பின்னைமயமில்லை.
*அந்நமயம் பிராணமயம்.
57. அன்னமிட்டாரைக் கன்னமிடலாகாது.
உண்டவீட்டுக்கு இரண்டகம்பண்ணலாகாது.
58. அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்.

EXAMINATION PAPERS.

B. A. Tamil Text-Books and Grammar—1880.

திருக்குறள். இராமாயணம். பிரபோதசந்திரோதயம்.

I. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.
அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

(*a*) கோறல், வேட்டல் என்னும் பதங்களைப் பதச்சேதப்படுத்தி, அவற்றிற்குரிய பிரதிபதங்களை யெழுதுக.

(*b*) வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலு முள்ள எந்த விசேஷித்த கொள்கையைக்கொல்ல கொல்லாமையென்னுங்கொள்கை காட்டப்பட்டது? இந்தக் கொள்கையை காட்டினசமயத்தார் யார்?

II. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(*a*) [மேற்காட்டிய திருக்குறளுக்குக்] கருத்துரை யெழுதுக.

(*b*) இசையெச்சமாவதென்ன? இந்த [த்திரு]க் குறளிலுள்ள இசையெச்சங்களெவை?

(*c*) 'ஐந்து' என்பதற்கு 'அஞ்சு' என்னும் பாடமு முண்டு. இதற்கு இலக்கணமென்ன? எதுசரி? இராமாயணத்து முதல்காப்பில் இவ்விரண்டு பதங்களில் எந்தப்பதம், எத்தனைதரம், வழங்கப்பட்டுவருகிறது?

(*d*) சிவஞானசித்தியார் முதலிய நூல்களில் பூதங்கள் நான்கு என்று விதித்திருப்பானேன்?

(*e*) "இவர் வஞ்சவேடம்" என்று முடிந்து இந்த [த்திரு]க் குறளை விளக்குவிக்கும் ஒரு பாட்டுப் பிரபோதசந்திரோதயத்திலுண்டு; அதனை யாவது அதன் பொருளையாவது எடுத்தெழுதுக.

(*f*) இந்த [த்திரு]க் குறளில் குறைந்து நின்ற பொருளெது?

III. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

(*a*) உள்ளல், கள்வேம் என்னும் பதங்களுக்குரிய தாதுக்களையும் அவற்றின் பிரதான உறுப்புக்களையு மெழுதுக.

(*b*) களவை "காரறிவு" என்பானேன்?

(*c*) "எனல்" என்பது எதிர்மறையா, உடன்பாட்டுவினையா? இவ்விரண்டிற்கும் பேதம் எதனால் விளங்கும்?

IV. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

(a) "வாய்மை" என்பதற்கு இலட்சணார்த்தமென்ன?

(b) நன்மை பயக்கப் பொய்மை வழங்கத் தகுமா?

(c) இந்த [த்திரு] க் குறளுக்குரிய சீர், தளை முதலியவற்றை விவரமாய்க்கூறுக.

V. பொய்யாமை யன்ன புகழில்லை பொய்யாமை
யெல்லா வறமுந் தரும்,

என்னும் [திருக்] குறளுக்கும்

பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சிதனை
மெய்வளரு நெஞ்சினர்கள் கண்டு களித்திடுவோர்,

என்னும் பாடலுக்கும் இருக்கும் சம்பந்தத்தையும் அதன்பயனையும் எடுத்துக்காட்டுக.

VI. பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணு மாசையால்
நிறையிரும் பல்பக னிருதர் நீணகர்
சிறையிருந் தேனையப் புனிதன் தீண்டுமோ.

பிறர்மனை யெய்திய பெண்ணைப் பேணுதல்
திறனல தென்றுயிர்க் கிறைவன் தீர்ந்தனன்
புறனல ரவனுறப் போது போக்கியான்
அறனல தியற்றிவே றென்கொண் டாற்றுகேன்.

எப்பொழு திப்பெரும் பழியி னெய்தினேன்
அப்பொழு தேயுயிர் துறக்கு மாணையேன்
ஒப்பரும் பெருமறு வுலக மோதயான்.
துப்பழிந் துய்வது துறக்கந் துன்னவோ.
என்பழி துடைப்பவ ரென்னின் யாவரே.

(a) [இவற்றிற்குப்] பொழிப்புரை யெழுதுக.

(b) நீணகர், தீண்டுமோ, ஆணையேன், கேட்டி, சின்னாள் என்னும் பதங்களுக்கு இலக்கணங் கூறுக.

(c) சீதை அநுமாரோடுகூடப் போகாமலிருக்கச்சொன்ன விசேஷித்த நியாயங்களெவை?

(d) சீதை இலங்கையில் சிறையிருந்த காலமெவ்வளவு?

(e) சீதைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிற அருந்ததி யார்?

VII. (a) பிரபோதசந்திரோதயம் என்பதற்குப் பதார்த்த மென்ன?

(b) இந்நூலின் பொருளும் பயனுமென்ன?

(c) இது எந்தச்சமயத்தாருடைய கொள்கையை நாட்டுகிறது?

(d) பாஷாண்டர் யார்?

(e) இரண்டுகோலுடைய மிருகக்கள்வர் யார்?

(f) இடம்பன் யார்? அவன் செயலென்ன?

(g) புலமகன், பிதாமகன், முடங்கல் என்னும் பதங்களுக்கு அர்த்தமென்ன?

(MADARS UNIV.)

EXAMINATION PAPERS.

B. A. Tamil Text-Books and Grammar—1881.

இராமாயணம். சிலப்பதிகாரம். திருக்குறள்.

I. கீழ்வரும் செய்யுள்களில், (*a*), (*c*) இரண்டிற்கும் பொழிப்புரை யெழுதுக.

(*a*) கல்விடைப்பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்...

(*b*) வண்மையில்லை யோர் வறுமையின்மையால்...

பொய்யுரையில்லாமையால் உண்மையுண்டென்று கூறல் வேண்டுமே; உண்மை யில்லையெனச் செப்பிய காரணம் யாது?

இவ்விருத்தத்தின் பொருளே யடங்கிய விருத்தங்களிரண்டு நகரப் படலத்திலிருந்தெழுதுக.

(*c*) ஏகம்முதற்கல்வி முளைத்தெழுந்தெண்ணில் கேள்வி...

இவ்விருத்தத்தின் உபமான உபமேயங்களைச் சோதித்து உமக்குத்தோன்றியவற்றை யெழுதுக.

எண்ணில் - கேள்வி, தவத்தின் - சாகம், தருமம் - மலர்ந்து, இம்மூன்றும் ஏன் எண்ணிற்கேள்வி, தவத்திற்சாகம், தருமமலர்ந்து ஆக மாறவில்லை?— நன்னூல் சூத்திரத்தோடு காரணங் கூறுக.

(*d*) உண்ணிலாவிய துயரம்பிடித்துந்தவாருயிர்நின்றூசலாடக்
கண்ணிலான்பெற்றிழந்தானெனவுழந்தான் கடுந்துயரங்கா
லவேலான்.

"கண்ணிலான் பெற்றிழந்தான்" என்றதனால் விசேஷமென்ன?

(*e*) மூன்னுலகளித்து முறை நின்ற வுயிரெல்லாம்...

இச்செய்யுளில் ஸ்ரீராமனை "உயிரெல்லாம் தன்னுயிரெனக் கருது தன்மையினன் மைந்த" எனக் கூறியது யாதுபயனைக் கருதி?

II. (*a*) அயோத்தியின் மதிலைத் தலைவர்க்கு நிகராகவும், அதன் வாயிலை வேதத்திற்கு நிகராகவும் கூறிய விருத்தங்களையாவது, அவற்றின் கருத்துனை [யை] யாவது, எழுதுக.

(*b*) விசுவாமித்திரர் தன் [ம்] யாகத்தைக் காப்பதற்கு ஸ்ரீராமனை அனுப்பவேண்டுமெனக் கேட்டதற்கு, தசரத சக்கரவர்த்தி கூறிய மறுமொழி யடங்கிய விருத்தத்தை யெழுதுக.

(*c*) ஸ்ரீராமர் தாடகையின்மேலெய்த அம்பின் செய்கையைப் பற்றிச் சொல்லியிருக்கும் விருத்தங்களையாவதெழுதுக; அல்லது அவ்விருத்தங்களின் பொருளையாவது, எழுதுக.

III. (*a*) பொறிவரியரவினும்புனிதன்.

(*b*) கடலெலாமொருகைமொண்டிடுமாதவன்.

(*c*) ஆதலாலரிக்காகண்டலன்றனக், கோதுகீர்த்தி யுடையவல்லாது.

இம்மொழிகளாற் குறிக்கப்பட்டகதைகளைச் சுருக்கமா யெழுதுக.

IV. 1. (*a*) சிலப்பதிகாரமென அக்காவியத்திற்குப் பேர்வந்த காரணமென்னை?

(*b*) அக்காவியத்தில் நூற்பயனுகக் கூறப்பட்ட நான்குமமைந்துளவா?

(*c*) அக்காவியத்தின் கார்த்தா சைவசமயத்தனோ, அருகனோ [ஆர்கதனோ]?

2. கலிவெண்பாவிற்கும், ஒருபோது கோச்சகத்திற்கும், மண்டில அகவற்பாவிற்கும் யாப்பிலக்கணங்கூறி, சிலப்பதிகார வேறெங்கிருந்தாவது உதாரணம் எழுதுக.

3. கனாத்திறமுரைத்தகாதையைச் சுருக்கமாய், இலக்கணவின்றி, வசனத்திலெழுதுக.

4. அடியில்வருவனவற்றிற்குப் பொழிப்புரை யெழுதுக :—

(a) கரியமலர் நெடுங்கட் காரிகைமுன் கடற்றெய்வங்கா
காட்டி
அரியசூள் பொய்த்தாரறனிலரென்றேழையாங்க

(b) வெயினிறம்பொருஉ மெல்லியற் கொண்டு
* * *
கையறுதுன்பங் காட்டினுங் காட்டும்.

(c) ஒருமூன்றவித்தோன் ஓதிய ஞானத்
* * *
பொருளில் யாக்கை பூமியிற்பொருந்தாது.

(d) ஒழிகெனவொழியாதூட்டும் வல்வினை
* * *
இறைவன் குரவனியல்குணனெங்கோன்.

V. A. நல்லார்கட்பட்ட வறுமையினின்னாதே
கல்லார்கட்பட்ட திரு.

(a) திரு வறுமையினு மின்னாதெனக் கூறியதெப்படி ?

(b) 'பட்டவறுமை,' 'பட்டதிரு,'— [இவற்றுள்] 'பட்ட' என்னும் பதத்திற்குப்பொருளென்ன ?

B. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணுவார்.

(a) 'வரினும்' என்பதில் உம்மைக்குப் பொருளென்ன ?

(b) 'தினைத்துணை - பனைத்துணை,'—இவ்வுபமானமேஉபயோகிக்கப்பட்ட வேறொரு குறளெழுதுக.

C. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

(a) 'இட்டி தாயினும்,' இதற்கிலக்கணங்கூறுக.

(b) இ[த்திரு]க்குறளுக்குப் பதவுரையும் விசேடவுரையுமெழுதுக.

D. தேரான் றெளிவுந் தெளிந்தான்கணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

(a) 'ஐயுறவு'—இதற்கிலக்கணங் கூறுக.

(b) 'தெளிந்தான் கணையுறவு' எவ்வாறிடும்பைதரும் ?

VI. அடியில் வரும் உபமானங்களுக்கு [த்திரு]க் குறளில் உபமேயங்களாக நிற்பனவற்றைக் கூறுக.

(a) பைங்கூழ்களை கட்டதனொடு நேர்.

(b) துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே.

(c) புதையம்பிற்பட்டுப் பாடூன்றுங் களிறு.

(d) இணருழ்த்து, நாறாமலரனையர்.

VII. கீழ்வரும் குறள் வெண்பாக்களுக்குப் பொழிப்புரை யெழுதுக.

(a) மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

(b) மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு.

VIII. கொடுங்கோன்மன்னனைத்தண்டிக்கவும் நீக்கவும் குடிகளுக்கு அதிகாரம் உண்டெனவோ இல்லையெனவோ திருவள்ளுவர் கோட்பாடு ?

EXAMINATION PAPERS.

B. A. Tamil Text-Books and Grammar—1884.

இராமாயணம். திருக்குறள். பாகவதபுராணம்.

I. (*a*) பாலகாண்டத்தில் நீர்படித்த படலங்களில் அடங்கிய இரண்டு முக்கிய கதைகள் எவை?

(*b*) பூர்வத்தில் ராஜ்யம் குலப்பெருமைமுதலியவைகள் சமானமான நிலையிலிருந்த அரசர்கள் ஒருவரையொருவர் காணும்பொழுது செய்து கொள்ளு மரியாதை என்ன? இதைக்குறிக்கும் பாட்டை ஞாபகமிருந்தால் எழுதுக.

(*c*) சீதாகலியாணக் கதையை இத்தேயத்தார் சிறப்பாகக் கொண்டதற்குக் காரணமென்ன? கலியாணச்சடங்குகள் பலவற்றுள் இங்கேசொல்லப் பட்டவை எவை? அவைகளுள் கிறிஸ்தவர்களும் அனுசரிப்பவைஎவை?

II. வந்தன னரசனென்ன மனத்தெழு முவகை பொங்கக்...

(1) இதற்கு [இச்செய்யுளுக்கு] பொழிப்புரை எழுதுக.

(2) இப்பாட்டில் காட்டிய உபமானத்தால் கொள்ளத்தக்க விசேஷ கருத்தென்னென்ன?

(3) "களிறுந்தேரும்" என்பவைகளை நீக்கி "மா" என்பது இங்குதனித்து வந்திருந்தால் இச்சொல் குதிரை என்று அர்த்தமாவதற்கு நன்னூல்விதி என்ன?

III. A. கம்பித்தலையெறிநீருறு கலமொத்துலகுலையத்...

B. கொடியுளாளோதனிக் குடையுளாளோகுலப்...

C. கங்கைவார் சடையோனன்ன மாமுனி கனலமேனுள்...

(*a*) இவைகளின் [இச்செய்யுள்களின்] கருத்தைமாத்திரமெழுதுக.

(*b*) A குறியிட்ட பாட்டில் சீர் தளைகளைப் பிரித்துக்காட்டுக.

(*c*) "உயர்திசை" என்பது பண்புத்தொகையா வினைத்தொகையா? நன்னூலுரையாசிரியர் கருத்தின்படி விடையெழுதுக.

(*d*) "வெம்பித்திரிதர" என்பதில் வலிமிகுந்ததற்கும், "வாளிகடெரிவான்" என்பதில் எழுத்துக்கெட்டுத்திரிந்ததற்கும் நன்னூல் விதிகளென்ன?

(*e*) "சலியா"—இதற்குரியகாலமெது? மேற்பாட்டில் எந்தகாலத்தில் வந்தது? இப்படிவருவதற்கு விதியென்ன? அன்றியும் "சலியா" என்பது வேறுவகை வினையாய் வருவதுண்டா? உதாரணமெழுதுக.

(*f*) செவ்வெண் என்பது என்ன? அது எத்தனைவகை? எதாகிலும் ஒருவகைக்கு மேல்பாடல்களில் உதாரணமெடுத்துக் காட்டுக. செவ்வெண்களில் எச்ச உம்மை வந்தால் எங்கேவரும்?

(*g*) B குறியிட்ட பாட்டிலுள்ள அலங்காரத்தையும் அவ்வலங்காரத்தின் இலக்கணத்தையுங் கூறுக.

(*h*) C குறியிட்ட பாட்டில் "தோற்றம்போன்றது" என்பதற்கு உபமேயமெது?

IV. (1) * * * *

(2) "அளித்தனெனபயம் வானத்தரவினை யஞ்சி நீவந்தொளித்தனை யஞ்சல்"—இப்படி சொன்னதற்குக் காரணமென்ன?

(3) "இன்றுபோய்க் கொணர்கிலை யென்செய்வாயெனக் கன்றி போடொத்தி"—இது யாரைநோக்கி யார்சொன்னது?

(4) "அஞ்சல்"—"கொணர்கிலே"—"ஒத்தி"; இவ்வினைச்சொற்கள் எந்தப் பிரிவில் சேர்ந்தவை? பகுதி விகுதிகளையும் பிரித்துக் காட்டுக.

"கொணர்கிலே"—இது மற்றகாலங்களில் வரும்ரூபங்களைஎழுதுக.

"ஒத்தி"; இது எந்தெந்தகாலத்தில்வரும்? "அஞ்சல்" என்னும் வினைமுற்று இன்னும் எந்தப்பொருளில் வரும்?

(5) "கங்கர் கொங்கர் கலிங்கர் குலிங்கர்கள்"—இப்பாட்டு முதல் மூன்று பாடல்கள் ஒரேமுடிபாய் இருப்பதற்குப்பெயரென்ன? அப்பெயர்வந்ததற்குக் காரணம் யாது?

V. பரசுராமனுக்கு க்ஷத்திரிய குலத்தின்மேல் வந்த விரோதத்திற்குக் காரணமென்ன? தசரதசக்ரவர்த்தி மாத்திரம் அவர் பகையை விலக்கிக் கொண்ட தெவ்வாறு?

VI. (a) சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

இதன் கருத்தை யெழுதி, 'நட்பு' பட்டடைக்கு எவ்விதத்தில் ஒப்பெனக் காட்டுக.

(b) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

நாணவேண்டுமவை, நாடவேண்டுமவை, பேணவேண்டுமவை, இவை யாவை?

(c) ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை

இதன் தாற்பரியமென்ன? ஆர, பசிப்பர், பெரும், உற்றக்கடை, இப்பதப் பிரயோகங்களுக்கு உரையாசிரியர் கூறிய பயனென்ன?

(d) இகல்காணா னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு.

இதில் 'நான்காவதும் இரண்டாவதும் ஏழாவதன்கண் வந்தன' என்று உரையில்சொல்லியிருக்கிறது. அதை விளக்கிக் காட்டுக.

(e) வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

இதில்உம்மை பிரயோகித்ததால்கிடைத்த பொருளென்ன? இதைப் பரிமேலழகர் உருவகவிசேடமென்று கூறியிருக்கிறார்—அதெங்ஙனம்? குறளின் தாற்பரியத்தையும் எழுதுக.

(f) அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
திட்பகை யுற்ற குடி.

பொருதென்னும்வினையெச்சம்எந்தமுற்றைக்கொண்டுமுடிந்திருக்கிறது? குடிக்குப் பயனிலையென்ன?

VII. (a) பரிக்ஷித்துவினுடைய வரலாறென்ன? அவருக்குப் பாகவதத்தை யுபதேசித்தவர் யார்? உபதேசகரைப்பற்றிய இதிஹாஸமென்ன?

(b) தர்மபுத்திரர் இராயசுவையும் [இராஜசூயத்தையும்] அச்சுவமேதத்தையும் எப்பொழுது எதன்பொருட்டுச் செய்தார்?

VIII. அடியில்வரும் செய்யுட்களில் குறிப்பிக்கப்பட்டிருக்கிற புராணங்களைச் சுருக்கமாய்ச் சொல்லுக:—

(a) கடியாது கொல் காளியி [ய] ன் வெவ்விடமும்...
(b) அந்தரத்துறை யமரரு மசுரருங் கடையும்...

IX. (a) விசுவரூப காட்சியை வர்ணிக்கும் செய்யுட்களை யெழுதுக.

(b) வாருணி, மத்தவாரணம், இன்னிசை, யாழ்முனி, ஏமம், ஸனகாதியர், சினகவாளினன், நைமிசம், கங்கை மைந்தன்; இப்பதங்கட்கு அர்த்தமெழுதுக. (MAD. UNIV.)

EXAMINATION PAPERS.

B. A. Tamil Text-Books and Grammar—1884.

I. பூர்வத்தில் அரசன்காலத்திலேயே ஒருவனை இளவரசாக்கும் எற்பாட்டின் நோக்கமென்ன? இராமனுக்குப் பட்டம் தரிக்க நிச்சயித்தபின் வசிட்டர் அவருக்குச் சொன்ன நீதிகளெவை?

II. அடியில் வரும் பாடல்களில் எவையாவன மூன்றுக்குப் பூர்ணமான பொழிப்புரை யெழுதுக:—

(1) ஓர்வி னல்வினை யூற்றத்தி னாருணை †
(2) எனை நீதி யினியன வையகப் †
(3) பரந்துமீ னரும்பிய பசலை வானகம் †
(4) பொய்வினைக் குதவும் வாழ்க்கை யரக்கனைப் பொருந்தியன் னார். †

III. (a) இப்பாடல்கள் என்ன விருத்தங்கள்? இலக்கணத்தோடு சொல்லுக.

(b) இப்பாடல்கள் எந்தெந்த சந்தர்ப்பத்தில் வருகின்றன?

(c) முதல்பாட்டிலும் நான்காம் பாட்டிலுமுள்ள அலங்காரங்களை, இலக்கணத்தோடு விளக்கிக் காட்டுக.

(d) "இனியன": —இதற்கு வேற்றுமை விரித்துக் காட்டுக. "புலன் கொளீஇ":—இதில் னகரம் விகாரப்படாமைக்கு விதியாது?

(e) "கொளீஇ":—இதற்குப் பகுபதவுறுப்பு, அளபெடையின் பேர், சாதாரணரூபம், இவை இன்ன வென்று கூறுக.

(f) "ஆயிரமௌலியான்"—ஆயிரமௌலியாயிருக்க நேர்ந்தது எச்சமயம்?

(g) "நெடுங்கணீடிய"—இதில் நீடியதுகண்ணாயிருக்க இப்பெயரெச்சம் புறந்தரனைச் சார்ந்ததற்கு விதியென்ன?

(h) "முனிவரனறைந்தசாபத்தால்"—சபித்தமுனிவன்யார்? எதற்காகச் சபித்தான்?

(j) "மீனரும்பிய வானகம்" :—இதில் "அரும்பிய" என்பது வானகத்தைச் சேர்ந்ததற்கு விதியென்ன?

IV. (a) "வானின் றிழிந்து வரம்பி கந்த மா பூதத்தின் வைப்பெங்கும்" :—இவ்வாக்கியத்தில் பஞ்சபூதங்கள் உண்டான வகையைப் பற்றிச் சொல்லியதைத் தெளிவாயெழுதுக.

(b) காமம், வெகுளி, பொருமை, இக்குணங்களால்விளைந்த காரியங்களுக்கு நீர் படித்த படலம் ஐந்தனுள் உதாரண மெடுத்து இரண்டுமூன்று வரியிலடக்கி எழுதுக.

(c) இராமன் சுமித்திரையினிடம் விடைபெறப் போன போது அவள் எந்தெந்தக் குணங்களை யெடுத்துவர்ணித்துப் புலம்பினாள்?

(d) * * * *

---

† கம்பராமாயணம், அயோத்தியாகாண்டம்.

V. வினைத்தொகைக்கும், வினைப்பகுதிக்கும் பேதமென்ன? ஆகு பெயருக்கும் அன்மொழித்தொகைக்கும் பேதமென்ன? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் கொண்டு விளக்கி யெழுதுக.

VI. (a) "பெருமை" என்பதின் இலக்கணங்களில் முக்கியமானவை எவை?

(b) ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

இதில் உபமான உபமேயங்களை யெடுத்தெழுதுக.

(c) அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர்.

இத்திருக்குறளால் பொருளின் பயனென்னவென்று கூறப்பட்டது?

(d) "நாணுடைமை" யாவதென்ன? அதற்குச் சரியான இங்கிலீஷ் மொழிபெயர்ப்பென்ன?

(e) குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை

இதன் தாற்பரியத்தை விரித்தெழுதுக.

(f) இரக்கவிரத்தக் கார்க்காணிற்

* * *

"இரத்தக்கார்"—இத்தொடர்க்கு இலக்கணங்கூறுக.

(g) இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின்.

"துன்பம்" எவ்வகைத்தனவாம்?

(h) இரப்பான் வெகுளாமை வேண்டு நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.

இதில் "உம்" என்ன பொருளில்வந்தது? அதுஎங்ஙனம்?

VII. பூரண வுபமைக் குதாரணமா யொரு செய்யுளையும், சூரிய சந்திரவுதயாஸ்தமனங்களை வர்ணிக்கும் செய்யுட்களுள் ஒன்றையும், திருவிளையாடலினின் றெழுதுக.

VIII. (a) அடியில் வருவனவற்றிற்கு அர்த்தமெழுதுக:—

ஆட்கொள்ளுதல், குப்பாயம், தீபகம், பரமேட்டி, கொய்யுளை, மலைவன்சிறகரிந்தவன், மந்தரை, ஞெகிழி, தெய்வமணி, திருவாலவாயுறையுஞ் சிந்தாமணி.

(b) "ஆலவாய்" என்று பெயர் வந்ததேன்?

IX. (a) முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

(b) சுட்டுதற் கரிய சோதி சுருதி வாம் புரவியோடு † [யது.]

(c) (அரிமர்த்தன பாண்டியன் மாணிக்கவாசகனை நோக்கிச் சொல்லி
உம்மை நானடுத்த நீரா வுலகியல் வேதநீதி †

இச்செய்யுட்களுக்குப் பொழிப்புரையெழுதுக.

---

† திருவிளையாடற்புராணம்.

EXAMINATION PAPERS.

B. A. Tamil Text-Books and Grammar.—1885.

I. (*a*) பள்ளி அடைப்படலம், என்பதற்குப் பொருளென்ன? இதில் இராமனைக் காட்டுக்கனுப்பின காரியத்தில் கோசலாதேவி பரதன் மீது கொண்ட சந்தேகம் நீங்கும்பொருட்டு இவர் என்னென்ன பிரதிக்கினைகள் செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றது?

(*b*) நீங்கள் படித்த காண்டத்தில் சூரியாஸ்தமயகாலத்தைப்பற்றி யாவது அல்லது அரசனில்லாத ராஜ்யத்தைப்பற்றியாவது கம்பன் வர்ணித்ததைப் பொருள் தெளிவாகச் செம்பாகமாய் எழுதுக.

II. இதனடியில் வரும் இரண்டு செய்யுட்கும் பொழிப்புரை எழுதி முன் பின் சம்பந்தம் கூறுக:—

(1) பாதங்கள் பெயர்தொறும் பாரு மேருவும்
போதங்கொ ணெடுந்தனிப் பொருவில் கூம்பொடு
மாதங்கம் வருகல மறுகிக் கால்பொர
ஓதங்கொள் கடலினின் றுலைவ போன்றவே.

(2) புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாந்
திண்ணிய திரியினில் விதியென் தீயினில்
எண்ணிய விளக்கவை யிரண்டு மெஞ்சினால்
அண்ணலே யவிவதற் கைய மாவதோ.

(*a*) இச்செய்யுட்கள் எவ்வகை விருத்தம்? இவ்வகை விருத்தத்தின் அடிகள் என்ன பெயர் பெறும்.? முதற்பாட்டில் (1) இரண்டாமடிக்குச் சீர்பிரித்துக் காட்டுக.

(*b*) "பாருமேருவும்".—இச்சொற்றொடரை 'பாருமேரும்' என்று புணர்ச்சி விதிப்படி எழுதலாமா? நீர் எழுதும் விடைக்கு நியாயமும் கூறுக. உம் என்பது செவ்வெண்ணில் வருதற்கும், முற்றும்மையாக வருவதற்கும் உதாரணங்களெழுதுக.

(*c*) "பாருமேருவும்" சலிப்பது எக்காலத்தில் உள்ளதென்று புராணங்களிற் கூறியிருக்கின்றது? மேற்செய்யுளில் எப்பொருளைக் குறிப்பதற்குப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது?

(*d*) உவமையணியானது பண்பு-தொழில்-பயன்-என்னும் மூன்றின் காரணமாக வருமென்னும் விதியை உதாரணங்களால் விளக்கிக் காட்டுக. முதற்செய்யுளிற் கூறினது எதனுள் அடங்கும்?

(*e*) "போதங்கொள்".—அசேதனமான மரக்கலத்திற்குப் 'போதங்கொள்' என்று கூறினது குறிப்பு, வெளிப்படை என்னும் இரண்டினுள் எது? அதனுள் கொள்ளும் பொருள் யாது?

(*f*) "கால்பொர".—இதற்கு அர்த்த மென்ன? செய்ய வென்னும் வாய்பாட்டு வினையெச்சம் எந்தெந்தக்காலத்தில் வரும்? இங்கு எப்படி வந்தது? மற்றிரண்டு காலங்களில் வருவது என்ன பொருள் வேறுபாடுபற்றி? இவைகட்கு முறையே உதாரண வாக்கியங்கள் எழுதிக் காட்டுக.

(*g*) வினைமுற்று பெயராகவந்தால் என்னென்னபொருள்படவரும்? முதற் செய்யுளில் "உலைவ" என்பது எந்தப் பொருளில் வந்தது?

(*h*) "போன்றவே."—இது பன்மையில் வருவானேன்?

(*i*) இரண்டாம் (2) செய்யுளில் வரும் அணி என்ன?

(*j*) இச்செய்யுளில் நான்கிடத்தில் வரும் "இல்," எந்தப்பொருளைக் குறிக்கின்றது? ஈற்றடியில் "ஆவதோ" என்பதில் ஓகாரத்திற்குப் பொருள் என்ன? "அவன் நன்னெறிசெல்லானோ" என்பதில் ஓகாரம் என்ன பொருளைத்தருகின்றது ?

(*k*) மேலிரண்டு செய்யுட்களில் வினைத்தொகை ஏதாவதிருந்தால் எடுத்துக்காட்டுக. வினைத்தொகை எந்தெந்தப் பொருட் பெயரைக்கொண்டு முடியும்? உதாரணங்களோடு எழுதுக.

III. (1) * * * * * *

(2) பின்வருபவைகளுக்கு அர்த்தமெழுதி முன்பின் சம்பந்தங் கூறுக:—

(a) நஞ்சினை நுகரென நடுங்குவாரினும்
அஞ்சின னயர்ந்தனன்.

(b) சொல்லொடுஞ் சினத்தொடு முணர்வு சோர்தர
வில்லொடுங் கண்ணநீர் நிலத்து வீழவே.

(c) .... கண்ணெனும்
புண்டரீ கம்பொழி புனலவன் சடா
மண்டல நிறைந்துபோய் வழிந்து சோரவே.

(3) "அன்புளவினி நாமோ ரைவர்களுளரானோம்"; "வடதிசை வருமங்கா ணின்னுழை வருகின்றேன்."—இவ்விரண்டும் எப்பொழுது யாருக்கு யார் சொன்ன வாக்கியங்கள்? கருத்தென்ன?

(4) "ஆயிரமிராமர் நின்கேளாவரோ".—இப்படி யார் யாரை எந்த ஏதுவாற் சிலாகித்தனர்?

IV. அயோத்தி - தயரதன் - கைகேசி - இலக்ஷ்மணன் - சுமந்திரன் - காகுஸ்தன்,—இப்பெயர்களுக்குக் காரணம் விரித்தெழுதுக.

V. நாயனார் நாமங்கள் யாவை?

VI. (a) நாயனார் அறத்தின் இலக்கணங்கூறிய (திருக்) குறளை எழுதுக.

(b) "அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது".

இதிற் பிற என்பதை முதனிலைத் தொழிற் பெயராகக் கொண்டு பிறவாழி என்பதற்குச் சனன சாகரமென்று அர்த்தம் பண்ணலாமா? எழுதும் விடைக்கு நியாயமுங் காட்டுக.

VII. (a) விண்ணம் போழும்வாள் வெயிற்கு வெம்புகா
னண்ணல் யானையா னுட லாலிலைத்
தின்னு நீர்நசைஇ யொரு தவத்தினோ
னண்ணு சாலைவாய் நடத்த னண்ணினான்.

இதற்குப் பதவுரை எழுதி, வாள், அண்ணல், ஆடல், வாய் என்பனவற்றிற்கு விசேட வுரையும் எழுதுக. 'நசைஇ' என்பது என்ன அளபெடை?

(b) "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்."

இதனைச் செய்யுணடையை ஒழித்துச் சந்தி பிரித்தும் தொகைகளை விரித்தும் சத்தியரூபமாக எழுதுக.

'உலகத்தோ டொட்ட' என்பதற்கு இரண்டு தாற்பரியமுண்டு; அவை யாவை?

VIII. பச்சிளம் புல்லுணப் பசுக்கண் மேய்த்தது
நச்சர வுச்சியி னடங்கு யின்றது
மச்சமுற் றிடவரு மட்வித் தீயினை
யிச்சைசெ யளையென வெடுத்து ளுண்டதும்.

இதில் முதலடியிலும் ஈற்றடியிலுமுள்ள ஒவ்வொரு சந்திக்கும் புணர்ச்சி விதி எழுதுக.

IX. (a) ஐயதார்ச்சனமேசய னுதியா; விரதத்திமிக்க மேதாதியவுசயன்; தொழுதியங் கலவமேய துஞ்சலில் வறுங்கண்; கழைசுளி களி நல் யானைக் காவலன்:—இவைகளின் அர்த்தம் என்ன?

(b) இறுதி வாக்கியத்திற் ககரம் மிகாது 'யானைகாவலன்' என்றால் என்ன அர்த்தமாகும்?

சிலைவ ணக்கிவெஞ் சினவ யப்பெரும்
விது ரத்தினன் புயல்கி ழித்தபொற்
லவ ளைத்தடங் குடுமி கொண்ட சேல்
வலனு யர்த்தவாள் வழுதி மானவே.

இதிலுள்ள உவமான உவமேயங்களை விரித்துக்காட்டுக.

'பொற் குலவளை' என ... அர்த்தமென்ன?

EXAMINATION PAPERS.

B. A. Tamil Text-Books and Grammar—1886.

I. (*a*) கார்முகம் வில்லின் பெயரானபோது என்னமொழி?

(*b*) அல்லாதபோது என்னத்தின்பெயராகும்?

(*c*) முகத்தோடு வேறு அடைபெற்றுநின்று அதனையுடைய பொருளையுணர்த்திய தமிழ்ச்சொற்கள் இரண்டும் அவற்றின் அர்த்தமும் எழுதுக.

II. (*a*) அனிந்திதை, கமலினி என்பவர்கள் யாவர்?

(*b*) இவர்கள் பூமியிற் பிறந்தபோது என்னபெயர்வகித்திருந்தார்கள்?

(*c*) சோமசுந்தரபாண்டியனது திருக்கலியாணத்தில் வந்து பணிவிடைசெய்த சுவர்க்கநாட்டு ஸ்திரீகளின் பெயரென்ன?

(*d*) ஊர்ப்பசி யாது திரிவுபெற்றது?

(*e*) இத்திரிவிற்கு வேறுதாரணம் இரண்டு காட்டுக.

III. (*a*) பின்வருஞ் சொற்களின் அர்த்தமென்ன?
காளிமை, எதி, பஞ்சரம், அதவம், ஆதன், சரளம், துமிலம், பல்லம்; கிம்பம், குதம்பை, சுவாகதம், தத்தி; அவ்வித்தல், பாத்தல், படிறு, புதல்.

(*b*) இவற்றில் இரண்டு சொல்லின் பிரயோகத்திற்கு இராமாயணத்திலும், இரண்டிற்குத் திருவிளையாடற் புராணத்திலும், இரண்டிற்குக் குறளிலுமிருந்து வாக்கியம் எழுதுக.

IV. (*a*)
திசைகட்டிய மால்கரி தெட்டமதப்
பசைகட்டின கிட்டின பற்பலபோர்
விசைகட்டழி தானவர் விட்டவர்பேர்
இசைகட்டிய வொத்திவர் சாமரையான்.

தெரிசிக்க வந்த சிலதேவர் சிறைப்பு ளூர்தி
வெருவிப் பறந்த வொழிந்தோர்விலங் கூர்தி மானங்
கருவிப் படையாற் சிதைபட்டன கால னூர்தி
குருதிப்புன லுக்கது கொற்றவை யுண்ட மதன்ன.

இவைகளுக்குப் பதவுரை எழுதுக.

(*b*) i. முதற் செய்யுள் என்ன விருத்தமாக இங்கே பிரித்திருக்கின்றது? ii. அதனைக் கலிவிருத்தமாக அலகிடுக.

(*c*) i. இரண்டாவதன் சந்தம் யாது? ii. தாழிசை துறை விருத்தத்தில் அஃது எந்த இனம்? iii. தரிசிக்க என்று பாடபேதம் பண்ணலாமா? ஏன்?

V. (*a*)
நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

இதற்கு விரித்துரை எழுதுக.

(*b*) "நத்தம்போற் கேடுமுள தாகுஞ்சாக் காடும்" என்று அ— லாமா? ஏன்?

(c) நத்தம் என்னுஞ் சொல்லின் பிறப்புக் கூறுக.
(d) போல் இங்கே என்ன சொல்?
(e) கேடு என்பதைப் பதமுடிக்க.
(f) சாக்காடு என்ன விகுதிபெற்றது? இவ்விகுதிக்கு வேறு உதாரணங் காட்டுக.

VI. (a) பின்வரும் வாக்கியங்களின் அர்த்தம் எழுதுக:—
"வெங்கனக்க வலயங்களும்"
"ஓமராமனா யொருங்குமுணர்வோர்"
"புருவத் - தேளிரண்டு நெரிய"
"நாகமது நாகமுற நாகமென நின்றான்"
"வெம்பராகுததனிவிளைந்த"
"செம்புகாட்டிய கண்ணிணை பாலென"
"அன்னைதன் கன்னிக்கன்றி
"இங்கிவன் மருகனாக வெத்தவமுடையாள்"
"பரையாதி விருப்பறிவுதொழிலாகி"
"இலனென்னு மெவ்வமுரையாமையீதல்"
"தவ்வையைக் காட்டிவிடும்"
(b) "அன்னை ... யாள்" என்பதைத் தனிவசனங்களாகப்பகுக்
(c) "இலனெ... யீதல்" என்பதன் நான்கு அர்த்தமும் எழுத
(d) தவ்வையைக் காட்டிவிடும் என்ப தென்னமயக்கம்? பே கோள் காட்டுக.

VII. (a) i. "அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்" என் பொருள்கோள்? ii. அதற்கு நன்னூற் சூத்திரம் யாது
(b) "இலர்பல ராகியகாரணநோற்பார் - சிலர்"—i. இவர் யா க்குறித்தது? ii. ஏன் அவ்வாறு பொருள்பட்டது? iii. பே கோள் காட்டுக.
(c) "பெற்றம் - புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று" இ தென்ன அலங்காரம்?

VIII. கம்பர் கவியோடு கோதாவிரியையும் பரஞ்சோதிமுனிவர் பல யைக் கடலினோடும் உருவகப்படுத்திய செய்யுட்களை எழுதுக. பாட்டு (பகமில்லையாயின் அவ்வர்ணனைகளைப் பூரணமாக எழுதுக.

IX. அல் விகுதி வியங்கோளில் ரூபவிகற்பமின்றி உடம்பாடாக எதிர்மறையாகவும் வருதற்கு உதாரணமாக ஒரு குறள் காட்டுக.

X. நமக்குத் தீமைசெய்தார்க்கு நாம் எப்படி ஒழுகல்வேண்டு இதற்கு விடை குறளிலிருந்து எடுத்தெழுதுக.

XI. (a) "பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்"
இதில் முதலடியிலுள்ள சந்திகளுக்குப் புணர்ச்சி கூறுக.
(b) "பொன்னிகாவலன்"—இயல்பாதற்கு விதியாது? அதற்கு வேறுதாரணம் இரண்டு காட்டுக.
(c) இரண்டு காலங்காட்டும் விகுதிக்குச் சில உதாரணம் எழுத

XII. பஞ்சவடிதீரத்தின் சிறப்பையாவது, விராதன் கூறிய ஸ்ரீர ஸ்துதியையாவது விரிவா யெழுதுக. (Mad. Univ.)

ஸ்ரீ

விளம்பரம்.

கலாதரங்கிணி

என்னும் இப்பத்திரிகையை வாங்கவிரும்புவோர் சென்னபட்டணத்தைச் சார்ந்த சூளை அவதானம் பாப்பையர் வீதியில் 56 - வது கதவிலக்கமுள்ள கிருகத்திலிருக்கும் பா. கங்காதரதேவ பேரால் கடிதமனுப்பவேண்டியது.

ஸம்ரக்ஷகர்கள்.

இப்பத்திரிகைக்கு முன்பணமாக வருஷம் 1 - க்கு ஒரேதடவையில் ஐந்துரூபா வீதமாவது, பிரதிமாதமும் எட்டணாவீதமாவது பொருளுதவி செய்துவருவோர் இதற்கு ஸம்ரக்ஷகர்கள் என்னப்படுவார்கள். அவர்களுக்கு இப்பத்திரிகையும் இதற்கு அநுபந்தமாக அச்சிடப்படும் பலநூல்களும் விலையின்றிக்கொடுத்துவரப்படும். மாதம் எட்டணாவீதம் பொருளுதவிசெய்யும் புறநாட்டிலுள்ள ஸம்ரக்ஷகர்கள் ஆறுமாதத்திற்கொருமுறை மணியார்டர் மூலமாய்ப் பணத்தை முன்னதாகவே யனுப்பவேண்டும். புறநாட்டிலுள்ள ஸம்ரக்ஷகர்களுக்கு தபாற்செலவுமுதலியவை யின்றியே பத்திரிகையும் அநுபந்தங்களும் அனுப்பப்பட்டுவரும்.

கையொப்ப விவரம்.

			ரூ.	அ.	பை.
இந்நகரவாசிகளுக்கு...	௵ 1-க்கு...		3	0	0
” ”	௴ 6-க்கு...		2	0	0
புறநகரவாசிகளுக்கு தபாற்கூலியுட்பட ...	௵ 1-க்கு...		4	0	0
” ” ” ...	௴ 6-க்கு...		2	8	0

☞ மேற்கண்ட தொகையை முன்னதாகக் கட்டினவர்களுக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

புறநகரவாசிகள் கையொப்பத் தொகையை மணிஆர்டராகவாவது, ½ அணா அல்லது 1 அணா தபால் முத்திரைகளாகவாவது அனுப்பலாம்; தபால் முத்திரை அனுப்புவோர் ரூபா 1-க்கு அணா 1 வீதம் வட்டமும் சேர்த்து அனுப்பவேண்டியது.

குறிப்பு.—இப்பத்திரிகையில் பெரும்பாலும் வேதம், வேதாங்கம், மீமாம்சை, நியாயம், புராணம், இதிகாசம் முதலியவற்றிலுள்ள விஷயங்களும் ஆங்கிலேயபாஷையிலிருக்கும் அருமையான சில சாஸ்திரங்களின் ஸாராம்சங்களும், சென்னைச் சர்வகலாசாலைப் பரீட்சைகளுக்கு ஏற்படும் தமிழ்ப் பாடங்களுள் முக்கியமானவற்றிற்கு ஒருவாறு உரைமுதலியனவும்; சிறுபான்மை விநோதக்கதைகள், விடுகதைகள், பழமொழிகள் முதலியவைகளும் எழுதப்படும். மேலும் வித்வான்கள் யாரேனும் தங்களுடைய கல்விக் களஞ்சியத்திற் சேர்த்து வைத்திருக்கும் அருமையான விஷயங்களை இப்பத்திரிகையின் மூலமாக வெளியிட விரும்பினால் அதற்கும் இடங்கொடுக்கப்படும். மதவிஷயங்களை எடுத்துச் சொல்லும்போது உயர்வு தாழ்வுகளைப்பற்றிய அபிப்பிராயங்களை விலக்கிப் பொதுவாக அவைகள் இன்னின்னவென்பதும் இன்னின்ன வகையில் ஒன்றின் மற்றொன்று பேதப்படுகிறதென்பதும் சுருக்கமாய் எழுதப்படும். ஒருவரை யொருவர் தூஷித்து எழுதும் விஷயங்கள் இப்பத்திரிகையில் அச்சிடப்படமாட்டா.

கலாதரங்கிணி.

இப்பெயர்பூண்ட பத்திரிகையின் சில சஞ்சிகைகளை இப்பத்திரிகாசிரியர்............எமக்கு அனுப்ப ஒருவாறு பார்வையிடலானோம். இவற்றின் முதற்சஞ்சிகையில் அவர்கூறும்வண்ணம் வேதம், புராணம், இதிகாசம் முதலிய விஷயங்கள் எழுதப்படுகின்றன. இவை கல்வியில் தேர்ச்சியடையக்கருதுவோர்க்கு இன்றியமையாதவையென்னத் தட்டில்லை. முன்னாளில் பாண்டியர்காலத்துத் தமிழ்செழித்துவந்ததென்று கேட்டுள்ளோம்; ஆயினும் பின்னாளில் துருஷ்கர் கொடுங்கோன்மையில் அநந்தம் நூல்கள் இறந்தவுண்டு வரவர வைக்கோலெடுத்தான்வழியாய் மலினத்தையடைந்த நற்றமிழ்மாதுக்குற்றதந்தையாய்க் கற்றவர் மற்றவர் களிக்க அவர் கொண்ட நன்முயற்சிக்கு வியக்கின்றேம். இத்தகைய பத்திரிகை இந்நாளில் எங்குமின்மையின் இத்தென்னாட்டிற்கு இது அவசியமே; ஆயினுமையின் இது எந்நாளும் செழித்தோங்கத் தமிழெனும் அமிழ்தின் இனிமையும் அருமையும் பெருமையும் அறிந்தோர் முன்னால்வந்து தம்மாலியன்ற உதவியைச் செய்யவேண்டுவது அத்தியாவசியகம். நமது நாட்டில் சமீபகாலத்தில் அநேகதமிழ்ப்பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன; அவை பெரும்பாலும் கைத்தொழில், வர்த்தகம், ஒற்றுமை, உத்தியோகம், அரசாட்சி இப்படிப்பட்ட விஷயங்களைப் பேசும்வையா யிருக்கின்றனவேயன்றி, மதம் பாஷை முதலிய விஷயங்களை நன்கெடுத்துணர்த்தாமையின், இக் கலாதரங்கிணி அவற்றை மிகுதியும் தெளிவாய் எடுத்துணர்ப்பதனால், பலர்க்கும் பயன்படுவதன்றி, முக்கியமாய் உயர்தரக்கல்வியிற்பயிலும் மாணாக்கர்களுக்கு வேண்டிய ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் சில பாகங்களுக்குப் பொருள் கூறலோடு, கடியநடையில் அமைந்துள்ள பொருளிலக்கணம், அணியிலக்கணம் ஆகிய இவற்றை ஒருவாறு எளியநடையிற்காட்டி, கற்கும்மாணாக்கருக்கறிவூட்டிக் களிப்பூட்டி வருகின்றது. இதனுள் காணப்படும் இராமாயணவுரைகளில் ஆங்காங்கு சிற்சில உரைகள் சிலர்கருத்துக்கு மாறுபட்டிருப்பினும், அவை வித்தியார்த்திகட்குப் பேருதவியென்பதற்கையமில்லை. நாம்பார்த்தவளவில் மதம், பாஷை, புராணம், இலக்கணம் ஆகிய இவ்விஷயங்களில், பத்திராசிரியர் சங்கதிகளை ஆங்காங்கு நன்காராய்ந்து திரட்டியெழுதுகிறாரென்பதிற் சந்தேகமில்லை. நடை தெளிவாயும் இன்பமாயும் இருப்பதோடு, சொன்னயம் பொருணயம் வாய்ந்து படிப்போர்க்கு வெறுப்பைத்தராது இனிப்பைத் தருகின்றது. இதில் இரண்டொரு அபிப்பிராயம் எமக்கு உதிக்கின்றன; என்னெனில், இராமாயண உரையில் நைடதத்திற் றிருப்பதுபோல விசேஷவுரையும், மேற்கோளும், அலங்காரமும், இலக்கணவிசேஷங்களும் இன்னும் அதிகப்பட்டிருக்குமாயின் நலமாயிருக்கும். பி. ஏ. பரீக்ஷை வினாக்கள்மட்டும் எழுதியிருக்கின்றனர். அவை மாணாக்கருக்கு விசேஷ உதவிசெய்யுமென்று தோன்றவில்லை. அவ்வினாக்களுக்கு உத்தரமும் அவற்றுடன் எழுதியிருப்பின் மிக்கப்பயன்படும் என்றெண்ணுகிறோம். இன்னும் இராமாயணவுரையில், பாக்களை அடியடியாய்ப்பெயர்த்துவைத்துப் பொருள்கூறியிருப்பது தற்காலம் பரீக்ஷைக்குப்படிக்கும் மாணாக்கருக்கு அவ்வளவு தெளிவாயிருக்குமென்று தோன்றவில்லை. பொருளிலக்கணவிஷயத்தில்கூட விளக்கம் போதாது. இவற்றைக்கவனித்து இனி பிரசுரிக்கும் சஞ்சிகைகளில் பத்திரிகாசிரியர் சீர்திருத்துவாரென்று எண்ணுகிறோம். தொக்குத்தொகையாய்ப் பார்க்குமிடத்து இதில் கூறியுள்ள கல்வி மதம் முதலிய விஷயங்களில் இது செய்யும்பயன் மிகப்பெரிதே. ஆதலால் இதற்குக் கலாதரங்கிணி என்னும் பெயர் நன்கமைந்தது. இதில் உருசியுடைய ஒவ்வொருவரும் இதனை வாங்கிப்படித்து மற்றவரையும் வாங்கும்படிசெய்து இதன் க்ஷேமத்தை நாடவேண்டும். நம்மவர் ஒவ்வொருவரும் அபிமானம்வைத்து, அருமையைவிட்டு வாங்கிப் படிப்பார்களென்று நம்புகிறோம்:—சுதேசமித்திரன்.